திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, 12½ ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்குமேல் நிலங்கள் வைத்திருப்பவர்கள் விவசாய வருமான வரி கட்டி வந்தார்கள். இப்போது அந்த உச்சவரம்பை 7½ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஆக்கிவிட்டீர்கள். இதனால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மீண்டும் அதை 12½ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உயர்த்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்போதைக்கு இல்லை.

Compaints against Special Commercial Tax Officer, Tirunelveli.

* 71 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether a petition, dated 9th May 1970 has been received from a few villagers of Rajakrishnapuram in Nangunery taluk of Tirunelveli district regarding the corrupt practices of the Special Commercial Tax Officer, Tirunelveli; and

(*b*) if so, whether any action has been taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) ஆம்.

(இ) மனுவில் அடங்கியுள்ள குற்றச்சாட்டுகள் புலனாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

Appointment of Government Pleader for Madras City.

* 72 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to appoint a Government Pleader for Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Industrial Estate at Hosur.

* 73 *Q.*—Thiru B. VENKATASAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start an Industrial Estate at Hosur in Dharmapuri District; and

(*b*) if so, when it will be started?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) இத்திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

Thiru K. S. KOTHANDARAMIAH: The sanction of industrial estate at Hosur is pending for the last so many years May I know from the Hon. Minister when he is going to sanction it?

1971 ஜூன் 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நான் அன்றைக்கே பதில் சொன்னேன். சுமார் 6 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டது. ஹொசூரிலும், கிருஷ்ணகிரியிலும் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்களை அமைப்பதற்குப் பயன்படாத சூழ்நிலை இருப்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் வந்து பார்த்தார்கள். இதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்த பிறகுதான் முடிவு சொல்லப்படும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Has any land been acquired for Hosur to start an industrial estate?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சுமார் 12 ஏக்கர் 34 சென்டு நிலம் அதனுடைய தேவைக்காக வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : May I know from the Hon. Minister for Industries whether the buildings in all industrial estates in Tamil Nadu have been occupied or whether people are not coming forward to occupy certain industrial estates?

MR. SPEAKER : This is about Hosur.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெரிய நகரங்களிலே இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் கட்டிடங்களுக்கு கிராக்கி இருக்கிறது. மொபசல் பகுதிகளில் கட்டப்பட்ட இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளில் இடம் காலி இருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : If the said land of 12 acres has not been put to proper use, why should not Government think of giving it back to the owners?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இதுபற்றி இப்போது சொன்னார்கள். 1966-லே எடுக்கப்பட்ட முடிவு. கிருஷ்ணகிரியிலே தெரிகின்ற முடிவைப் பார்த்து இதை மறுபரிசீலனை செய்யலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இது மிகவும் பின்தங்கிய மாவட்டம். 1966-ம் வருஷத்திலே திட்டம் போட்டு 12½ ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு இதை ஆரம்பிக்காமல் இருப்பது கவலை தருவதாக இருக்கிறது. இது எப்போது ஆரம்பிக்கப்படும் என்ற உத்தேச தேதியாவது சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆரம்பிக்க வேண்டாமென்றுதான் இப்போது பதில் சொன்னேன். கிருஷ்ணகிரியில் நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் இதைப்பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று சொன்னேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : The Hon. Minister said that because Krishnagiri industrial estate is not functioning properly they are considering about Hosur. My submission is Hosur is different. Conditions in Hosur and Krishnagiri differ

in so many respects. I am confident that if an industrial estate is started in Hosur, it will work properly. May I know from the Hon. Minister when he is going to start an industrial estate at Hosur?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி இப்படிப்பட்ட வாதங்கள் கிளப்பப்படும் என்றுதான் நம்முடைய அரசு புதிய கொள்கையை வகுத்திருக்கிறது. நாம் நிலத்தை வாங்கிக்கட்டிக் கொண்டு பின்னாலே வருவார்களா, வரமாட்டார்களா என்று பரிசோதிப்பதைவிட யார் யார் முன் வருகிறார்களோ அவர்களுக்கு ஹயர் பர்சேஸ் என்ற முறையில் கொடுக்கலாம் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் ஹோசூரில் எத்தனைபேர்கள் இன்டஸ்டிரியல் எஸ்டேட் வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று தகவல் கொடுத்தால் அதைக் கட்டிக்கொடுக்கத் தயாராகயிருக்கிறோம்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, தமிழகத்தில் சில பகுதிகளுக்குச் சலுகையளிக்க அரசாங்கம் முன் வந்திருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட சலுகை புதிதாகத் தொடங்கும் தொழிற்சாலைகளுக்கு மட்டும்தானா, அல்லது ஏற்கனவே நடந்து கொண்டு வருகின்ற பழைய தொழிற்சாலைகளுக்கும் இந்தச் சலுகைகள் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில அரசும், மத்திய அரசும் பல சலுகைகள் தருகின்றன. சில சலுகைகள் புதிதாகத் தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கும், இருக்கின்ற தொழிற்சாலையை விஸ்தரிக்கும் பொழுது எக்ஸ்பான்ஷன் ஸ்கீம் என்ற வகையில் அவைகளுக்கும் இது பொருந்தும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, இப்பொழுது சென்னையில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளுக்கு கட்டிடம் கொடுக்காமல் இடத்தை மட்டும் தருவதாகச் சொல்லப்படுகிறது. ஏன் அங்கெல்லாம் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படவில்லை?

மான்புமிகு திரு. செ. மாதவன் : இரண்டு திட்டமும் இருக்கிறது. அரசாங்கம் கட்டிடம் கட்டிக் கொடுத்து கிண்டியில் அம்பத்தூரில் வந்திருக்கிறது. டெவலப்ட்பிளாட்ஸ் என்ற முறையில் நாமே வாங்கிக்கொடுத்து அவர்கள் விருப்பம்போல் கட்டிக்கொள்ள அங்கீகாரம் கொடுக்கிறோம், அதற்குரிய பண உதவியும் செய்கிறோம்.

Paper Factory in Denkanikotta.

* 74 Q.—Thiru B. VENKATASAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start a paper factory at Denkanikotta in Dharmapuri district; and

(b) if so, when it will be started?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.